பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

14 10 2025 TUESDAY 7.15 PM

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- இந்தியா வரும் மங்கோலிய குடிமக்களுக்கு இலவச மின்னணு விசாக்கள் வழங்கப்படும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

- ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தி இருப்பதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

- உயர்தரம், பாதுகாப்பு, நிலைத்தன்மையில் உலக அளவில் இந்தியா முன்னணி நாடாக திகழ்வதாக மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

- பீகார் சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடும் 71 வேட்பாளர்கள் அடங்கிய முதல் பட்டியலை பிஜேபி இன்று வெளியிட்டுள்ளது.

- உலக ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Rounak Chouhan மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>

இந்தியா வரும் மங்கோலிய குடிமக்களுக்கு இலவச மின்னணு விசாக்கள் வழங்கப்படும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் மங்கோலிய அதிபர் திரு Khurelsukh Ukhnaa-வுடன் ஆலோசனை மேற்கொண்டபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மங்கோலியாவிலிருந்து இளையோர் கலச்சார தூதர்கள் குழு இந்தியா வருவதற்கான ஏற்பாடுகளை இந்திய அரசே மேற்கொள்ளும் என்று அறிவித்தார்.

நாலாந்தா பல்கலைக்கழகம் மங்கோலியாவில் புத்த மதத்தை பரப்புவதில் முக்கிய பங்கு வகித்ததாக பிரதமர் குறிப்பிட்டார்.

இந்த வரலாற்று சிறப்புமிக்க உறவுகளை மேலும் வலுப்படுத்த நாலாந்தா பல்கலைக்கழகத்தையும், மங்கோலியாவில் உள்ள Gandan புத்த தலத்தையும் இணைக்க இருநாடுகளும் முடிவெடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

மங்கோலியாவில் இந்தியாவின் உதவியுடன் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை அமைக்கப்பட்டு வருவதாக திரு நரேந்திர மோடி கூறினார்.

இதனை வரவேற்பதாக கூறிய மங்கோலிய அதிபர் திரு Khurelsukh Ukhnaa, இருநாடுகளுக்கு இடையேயான டிஜிட்டல் ஒத்துழைப்பு ஒப்பந்தம் வரலாற்று சிறப்புமிக்கது என்று குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>>

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தி இருப்பதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

ஹரியானாவில் தேசிய பாதுகாப்புப்படையின் நிறுவன நாள் விழாவில் இன்று உரையாற்றிய அவர், தீவிரவாதத்தை முறியடிக்க நமது பாதுகாப்புப்படை வீரர்கள் தயாராக இருப்பதாக தெரிவித்தார்.

ஆபரேஷன் சிந்தூர் மூலம், பாகிஸ்தானில் தீவிரவாத முகாம்கள் மற்றும் பயிற்சி மையங்களை தகர்த்ததாக அவர் சுட்டிக்காட்டினார்.

பஹல்காம் தீவிரவாத தாக்குதலில் தொடர்புடைய தீவிரவாதிகளை ஆபரேஷன் மகாதேவ் மூலம் அழித்ததாக திரு அமித் ஷா தெரிவித்தார்.

<<<<<<>>>>>

மத்திய தொழிலாளர் வேலைவாய்ப்பு அமைச்சகம் மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சகம் சார்பில் மேற்கொள்ளப்பட்டுவரும் நலத்திட்டங்கள் குறித்து குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணனிடம், அத்துறைக்கான அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா இன்று எடுத்துரைத்தார்.

தொழிலாளர் சட்டங்களை எளிமைப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும், தொழிலாளர்களுக்கான சமூக பாதுகாப்பு திட்டங்கள் குறித்தும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் பல்வேறு துறைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய வேலைவாய்ப்புகள் குறித்தும் திரு மன்சுக் மாண்டவியா எடுத்துக்கூறினார்.

இளைஞர்களின் திறன் மேம்பாட்டிற்காகவும், வேலைவாய்ப்பிற்காகவும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மை பாரத் இணையதள சேவையை குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் பாராட்டினார்.

<<<<<<>>>>>

இந்திய தர நிர்ணய அமைவனம் மூலம், நம் நாடு உயர்தரம், பாதுகாப்பு, நிலையான்மையில் உலக அளவில் முன்னணி நாடாக திகழ்வதாக மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

நொய்டாவில் நடைபெற்ற உலக தர நிர்ணய தின விழாவில் இன்று காணொலி மூலம் உரையாற்றிய அவர், இந்திய தர நிர்ணய அமைவனம், தரபரிசோதனையில் உலக அளவில் முன்னணி நிறுவனமாக செயல்படுவதாக கூறினார்.

நகர்ப்புற மற்றும் ஊரகப்பகுதிகளில் உள்ள மக்களுக்கு தர நிர்ணயம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றும் திரு பிரல்ஹாத் ஜோஷி வலியுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய இணையமைச்சர் திரு பி எல் வர்மா, பொருட்களுக்கு சர்வதேச அளவிலான தர நிர்ணயம் குறித்த அவசியத்தையும், உலக பொருளாதாரத்தில் இதன் பங்கு குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காகவே இந்நாள் கடைபிடிக்கப்படுவதாக தெரிவித்தார்.

<<<<<<>>>>>

இந்தியாவில் தயாரிக்கப்படும் பொருட்களின் தரத்தை உறுதி செய்வது அவசியம் என்று இந்திய தர நிர்ணய அமைவனத்தின் துணை இயக்குனர் திருமதி மீனாட்சி கணேசன் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் இதுதொடர்பான நிகழ்ச்சியில் பேசிய அவர், தமிழகத்தில் தரமான பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதாகவும், உற்பத்தித்துறையில் முக்கிய பங்கு வகிப்பதாகவும் கூறினார்.

மக்களுக்கு பயனளிக்கும் விதத்தில் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குடன் மத்திய அரசு செயல்பட்டு வருவதாகவும், உலக அளவில் தரமான பொருட்கள் உற்பத்தி மையமாக இந்தியாவை மாற்ற அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் திருமதி மீனாட்சி கணேசன் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

பீகார் சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடும் 71 வேட்பாளர்கள் அடங்கிய முதல் பட்டியலை பிஜேபி இன்று வெளியிட்டுள்ளது.

இதன்படி, பீகார் துணை முதலமைச்சர்கள் திரு Samrat Chaudhary - தாராபூர் தொகுதியிலும், திரு விஜய் குமார் சின்ஹா – Lakhisarai தொகுதியிலும் போட்டியிடுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பிஜேபி தலைவர் திரு ஜெ பி நட்டா, பிரதமர் திரு நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்கள் திரு ராஜ்நாத் சிங், திரு அமித் ஷா உள்ளிட்டோர் அடங்கிய கட்சியின் மத்திய தேர்தல் குழு கூடி இந்த பட்டியலுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

பீகாரில் அடுத்த மாதம் 6 மற்றும் 11-ஆம் தேதிகளில் இரண்டு கட்டங்களாக சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளது.

<<<<<<>>>>>

நடப்பு நிதியாண்டில் நாட்டின் நேரடி வரிவசூல் 11 லட்சத்து 89 ஆயிரம் கோடி ரூபாயாக உள்ளதாக வருமானவரித்துறை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், கடந்த ஏப்ரல் ஒன்றாம் தேதிமுதல், அக்டோபர் 12-ஆம் தேதிவரையிலான காலக்கட்டத்தில் ஐந்து லட்சத்து 2 ஆயிரம் கோடி ரூபாய் கார்பரேட் வரி வசூலிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்த நடவடிக்கைகளால் விவசாயிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் அதிக அளவில் பயன்பெற்று வருகின்றனர்.

டிராக்டர் உள்ளிட்ட வேளாண் இயந்திரங்களுக்கு ஜிஎஸ்டி வரி குறைக்கப்பட்டுள்ளதால், தங்களது வாழ்வாதாரம் உயர்ந்து, விவசாயத்தை வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு செல்லும் மத்திய அரசின் முயற்சி வெற்றிபெற்றுள்ளதாக தமிழகத்தின் சேலம் மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் தெரிவித்தனர்.

*(Voice Byte – விவசாயிகள் – 35 Sec. )*

<<<<<<>>>>>

மக்கள் தொடர்பியல் உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு உதவித்தொகையுடன் கூடிய பயிற்சித் திட்டத்தை மத்திய நீர்வள அமைச்சகம் அறிவித்துள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்கள் இந்த பயிற்சித் திட்டத்திற்காக தேர்வு செய்யப்படுவர் என்றும், ஆறு முதல், ஒன்பது மாதங்கள் வரை இந்த பயிற்சி வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் தொடர்பியல் பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு ஒவ்வொரு மாதமும் 15 ஆயிரம் ரூபாய் உதவித்தொகை வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பயிற்சித் திட்டத்தில் சேர விரும்பும் மக்கள் தொடர்பியல் உயர்கல்வி பயிலும் மாணவர்கள் அடுத்த மாதம் 24-ஆம் தேதிக்குள் mowr.nic.in என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

மூத்த குடிமக்களின் ஆரோக்கியத்தை பாதுகாப்பதற்கு சுகாதார நிலையங்களை மேம்படுத்துவது என்ற கொழும்பு பிரகடனத்திற்கு, உலக சுகாதார அமைப்பின் தென்கிழக்காசிய மண்டல அளவிலான சுகாதார அமைச்சர்கள் மாநாடு ஒப்புதல் அளித்துள்ளது

மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல், உலக சுகாதார அமைப்பின் தலைமை இயக்குனர் டாக்டர் Tedros Adhanom மற்றும் இந்த மண்டலத்தை சேர்ந்த நாடுகளின் சுகாதார அமைச்சர்களும் இதில் கலந்துகொண்டனர்.

<<<<<<>>>>>

பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இலங்கையுடனான உறவுகளை வலுப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக சீன அதிபர் திரு Xi Jinping தெரிவித்துள்ளார்.

பெய்ஜிங்கில், இலங்கை பிரதமர் ஹரிணி அமரசூர்யாவுடன் இருதரப்பு உறவுகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பொருளாதாரம், துறைமுகம், விவசாயம், சுற்றுலா உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இரு நாடுகளுக்கு இடையே ஒத்துழைப்பை மேம்படுத்த தயாராக இருப்பதாக கூறினார்.

<<<<<<>>>>>

## விளையாட்டுச் செய்திகள்

உலக ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Rounak Chouhan மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

குவஹாத்தியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்றில் அவர், 15-3, 15-6 என்ற செட் கணக்கில், இலங்கையின் Thisath Rupathunga -வை வென்றார்.

மற்றொரு இரண்டாவது சுற்றில் இந்தியாவின் Suryaksh Rawat 15-5, 15-8 என்ற செட் கணக்கில், துருக்கியின் Yigitcan Erol -ஐ வென்றார்.

----------

சீன சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Rutuja Bhosale – சீனாவின் Wushuang Zheng இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<<<<<<END>>>>>